005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
விசேட தேவைகள்சார் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
3 வது மட்டம்
இறுதிப் பரீட்சை – 2022
**STU5415/STU 6306**– கல்வி முகாமைத்துவம்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 26.11.2022 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இன் சகல வினாக்களுக்கும் பகுதி- II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

i. "வினைத்திறன்" மற்றும் "விளைதிறன்" ஆகிய பதங்களை விளக்குக.

ii. முகாமைத்துவ செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

iii. "விளைதிறன்மிக்க பாடசாலை" எனும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க.

iv. "பரவலாக்கம்" எனும் பதத்தினால் கருதப்படுவது யாது? என விளக்குக.

v. விளைதிறன்மிக்க பாடசாலையொன்றினை இனங்கண்டுகொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) பரிமாணங்களைக் குறிப்பிடுக.

vi. மெக்ஸ் வெபரினால் அறிமுகம் செய்யப்பட்ட பணித்துறை ஆட்சி மாதிரியின் பண்புகள் நான்கினை (04) குறிப்பிடுக.

vii. இலங்கையின் கல்வி முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

viii. கல்வி முகாமைத்துவ அறிவு ஒரு பாடசாலை முகாமையாளருக்கு எவ்வாறு முக்கியத்துவமுடையதாக அமைகின்றது என சுருக்கமாக விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

12.

i. “வகுப்பறை முகாமைத்துவம்” என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

ii. ஒரு விஞ்ஞான ஆசிரியர் என்ற வகையில் “வகுப்பறை முகாமைத்துவம்” ஏன் முக்கியமானது என விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. வகுப்பறையை முகாமைத்துவம் செய்யும் போது விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவர் முகங்கொடுக்கும் இரண்டு (02) பிரச்சினைகளையும் அவற்றை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

13.

i. மாஸ்லோ முன்வைத்துள்ள தேவைகளின் அடுக்கவமைப்பினை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. அதிபரின் முகாமைத்துவ வகிபங்கில் மாஸ்லோவின் தேவைகள் கோட்பாடு வகிக்கும் முக்கியத்துவத்தினை இரண்டு (02) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. மாஸ்லோவின் தேவைகள் கோட்பாடு பாடசாலை முகாமைத்துவச் செயன்முறைக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியுமென மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

14. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதாவது இரண்டிற்கு (02) சிறுகுறிப்பு எழுதுக.

i. பாடசாலையில் வள முகாமைத்துவம்
ii. ஹென்றி மின்ஸ்பேர்க்கினால் முன்வைக்கப்பட்டுள்ள முகாமையாளரின் பிரதான வகிபாகங்கள்
iii. உள்வாரியான வினைத் திறன்
iv. வகுப்பறை ஒழுக்கம்

(20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*

## பகுதி – II

9.

i. "கல்வி முகாமைத்துவம்" என்பதனால் கருதப்படுவது யாது என விளக்குக?

(04 புள்ளிகள்)

ii. "கல்வி முகாமைத்துவம்" மற்றும் "கல்வி நிருவாகம்" என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை இரண்டு (2) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. இலங்கையின் கல்வி முகாமைத்துவ ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை விளக்குவதுடன் நான்கு (4) மட்டங்களினதும் தொழிற்பாடுகளையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

10.

i. பிளேக் மற்றும் மவுட்டன் போன்றோரினால் அறிமுகம்செய்யப்பட்ட முகாமைத்துவச் சட்டகத்தினை சரியாக வரைக.

(04 புள்ளிகள்)

ii. இச் சட்டகத்திற்கு அமைவாக முகாமையாளர் ஒருவரின் விளைதிறன்மிக்க தலைமைத்துவ பாங்குகளை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. பிளேக் மற்றும் மவுட்டனின் சட்டகத்திற்கு அமைவாக சிறந்த தலைவர் என்ற வகையில் அதிபரொருவரின் வேறுபட்ட வகிபங்குகளை பரிசீலனை செய்க.

(08 புள்ளிகள்)

11.

i. மேற்பார்வை என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

ii. சிகிச்சைசார் மேற்பார்வையின் செயன்முறைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. கற்றல் கற்பித்தல் செயன்முறையின் தரத்தினை மேம்படுத்துவதில் சிகிச்சைசார் மேற்பார்வையின் முக்கியத்துவத்தினைக் கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)